பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2052)

நாவாந்துறைப் படிப்பகம்

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 26 புதன்கிழமை (13-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 176

### ரவூப்ஹக்கீம்-பேரியல் விரிசல் வலுக்கிறது

# முஸ்லிம் காங்கிரஸ் பிளவுறும் அபாயம்!

## ஆளும் கட்சியும் ஆட்டங்காணும்?

(நமது நிருபர்)

அமைச்சர் ரவூப்ஹக்கீமுக்கும், அமைச்சர் பேரியல் அஷ்ரப்பிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைப் பிளவுபடுத்துமளவிற்கு விரிசல் அடைந்துள்ளது.

11 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸில் ஒரு பகுதியினர் ரவூப்ஹக்கீமையும் மற்றொரு பகுதியினர் பேரியல் அஷ்ரப்பையும் ஆதரித்துவருகின்றனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உட்கட்சிப் பூசல்களினால் அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதா? இல்லையா? என்று தீர்மானிப்பதற்குரிய பொறுப்பை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவிடம் கட்சியின் உயர்பீடம் ஒப்படைத்துள்ளது.

அரசில் இருந்து விலகுவது தொடர்பாகஅமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் தீவிர ஆலோசனை நடத்தி வரும் அதே வேளை அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையிலான குழுவினர் அரசுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பது என்ற திடமான முடிவுடன் இருப்பதால் முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடும் சாத்தியக் கூறுகள் அதிகரித்திருப்பதாக முஸ்லிம்

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ். வைத்தியசாலை டாக்டர்களின் போராட்டத்திற்கு விரைவில் முடிவு!

## நேற்றைய சந்திப்பில் படைத்தளபதி உறுதி

[யாழ்ப்பாணம்)

விசேட கொடுப்பனவுவழங்குவதில் அரசு காட்டி வரும் பாரபட்சப்போக்கைக் கண்டித்து காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் யாழ்.போதனாவைத்தியசாலை வைத்தியர்களுக்கும். யாழ் மாவட்ட இராணுவத் தளபதி காமினி ஜெயசுந்தராவுக்கும்இடையே நேற்றய தினம்சந்திப்பு ஒன்று இடம்பெற்றது:

நேற்று 9.15 மணியளவில் 512வது படையணியின்தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பில் யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர்டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் வைத்தியர்களின் பிரதி நிதிகளாக டாக்டர் குமார வடிவேல், டாக்டர் பவானி டாக்டர் இளங்கோஞானி, டாக்டர் கணேஸ்வரராசா ஆகியோர் சலந்துகொண்டனர்.

வைத்தியர்களின் நியாயமான கோரிக்கையை கேட்டறிந்த இராணுவத் தளபதி,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் பலவீனமடைந்தால் தமிழ் பலவீனமடைந்துவிடும்

[கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் பலவீனமடையக்கூடாது அவர்கள் பலவீனமடைவது தமிழ் பலவீனமடைவதற்கு ஒப்பானது.

இவ்வாறு ரெலோஅமைப்பின் தலைவர் செல்வம்அடைகலநாதன் சர்வதேச செய்தி ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்

அவர்மேலும் தெரிவிக்கையில்

தமிழ் மக்களுடையஉரிமை போராட்டம் இன்றுசர்வதேச சமூகத்தவரின் கவனத்தைக் கவரும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளதென்றால் அதற்குரியபெருமைவிடுதலைப்புலிகளையே சாரும்.

இத்தகைய வளர்ச்சியுடன் புலிகள் விளங்கு வதாலேயே இன்று அரசாங்கம் கூடஅவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 134பயணிகளுடன் சென்ற விமானத்தில் குண்டுப்புரளி

[கொழும்பு]

பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் இருந்து பயணிகள்விமானம் ஒன்றுபுறப்பட்டபத்துநிமிடத்தில் விமானத்தில் குண்டு இருப்பதாக கிடைத்ததகவல் ஒன்றினால் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று134 பயணிகளுடன் கட்டார் நோக்கிப்புறப்பட்ட ஸ்ரீலங்காஏயர்லைன்ஸ் விமானத்திலேயே குண்டுஇருப்பதாக செய்தி கிடைத்ததை அடுத்து விமானம் உடநாடியாக தரையிறக்கப்பட்டு பயணிகள் அவசரஅவசரமாக இறக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது விமாத்தில் குண்டு எதுவும் இல்லை எனத் எதெரியவந்தது. [ந-4]

### கைது செய்யப்படும் சந்தேகநபர்களை

# 14 நாளுக்குள் ஆஜர்படுத்த உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை 14 நாட்களுக்குள் நீதவான் முன்னிலையில்ஆஜர்செயய வேண்டுமென்று உயர் நீதிமன்றம் நேற்று சட்டமா அதிபர் கே. சி. கமலசபேசனுக்கு உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பில் கைதுசெய்யப்பட்டுள்ள இருவர், அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையை மேற்கொண்ட பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்ட குழுவே இந்த உத்தரவை விடுத்துள்ளது.

பொலிசார் தடுப்புக்காவலில் வைத்துள்ளசந்தேக நபர்களை உரியமுறையில் நீதவான்

[8ம் பக்கம் பார்க்க]

# சிவில்நிர்வாக அதிகாரியை வவு. டாக்டர்கள் சந்திப்பர்

[வவுனியா)

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வவுனியாமாவட்டவைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள் இன்று வவுனியா சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் பியசோமாவைச் சந்தித்துப் பேசவுள்ளனர்,

இச்சந்திப்பின் போது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகள் தங்களதுவேலை நிறுத்தத்திற்கான காரணங்களை சிவில் நிர்வாகஅதிகாரியிடம் எடுத்துக்கூறவுள்ளனர்,

இச்சந்திப்பு இன்று காலை 10 மணிக்கு சிவில் நிர்வாக

(8ம் பக்கம் பார்க்க)

### மன்னார்-இரத்தினபுரி

# ஆயர்களின் கருத்திற்கு அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கைஅரசாங்கம் இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலமே தீர்க்கவிரும்புகின்றது என அண்மையில் ஐரோப்பாவில் கத்தோலிக்கஆயர்கள் மல்கம்ரஞ்சித், இராயப்பு ஜோசப் ஆகியோர் கூறியதை இலங்கை அரசாங் கண்டித்துள்ளது.

லண்டனுக்குவிஜயம்செய்த போது ஆயர்கள் அங்கு நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் இலங்கைஅரசாங்கம் இனப்பிரச்கினை விடயத்தில் யுத்த முனைப்பை விரும்புகிறதெனதமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார்கள்:

இக் கருத்துக்கு இலங்கை அரசு ஆட்சேபம் தெரிவித்து அறிக்கையொன்றைவெளியிட்டுள்ளது:

அரசாங்கம்சமாதானமுறையில்இனப்பிரச்சினையை தீர்ப்பதிலேயே ஆர்வமாக உள்ளது, விடுதலைப்புலிகளே சமாதானமுயற்சிக்கு தடையாகஉள்ளனர்.

அவர்களை சமாதானவழிக்

(8ம் பக்ப்ம் பார்ச்க)

# கொக்குவிலில் சூட்டுச் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் நாலகப் பகுதியில் நேற்று நண்பகல் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. எனினும் சேதவிபரம் தெரியவரவில்லை. [ந-43

# சமாதான முயற்சியிலிருந்து எரிக்சோல் புறந்தள்ளப்படவில்லை; அவரின்பணி தொடரும்

## நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பேட்டி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைவிவகாரத்தில் முக்கியமான அரசியல்ஈடுபாட்டை காட்டவேண்டியகாலம்நோர்வேக்கு நெருங்கிவிட்டது.

இப்படிக் கூறியுள்ளார் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் த்ரொப்ஜோட்ன் ஜக்லண்ட்.

இணையத்தளமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே ஜக்லண்ட் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர்மேலும் கூறுகையில் அரசு விடுதலைப் புலிகளுக்கிடையிலானசமாதானமுயற்சிகள் முன்னேற்றமடைந்து வருகிறது. இவ்விடயத்தில் எமது விசேடபிரதிநிதி எரிக் சோல்ஹெய்ம் புறந்தள்ளப்பட்டதாக வெளியான கருத்துக்களை தான்மறுப்பதாகவும் அவர்தொடர்ந்தும் இச் சமரசப்பணியில் அவர் ஈடுபடுவாரெனவும் தெரிவித்தார்.

ஆனால்தற்பொழுது இனப்பிரச்சினை விவகாரத்தை கையாள்வதில் உயர் மட்டத்தலையீடு தேவைப்படுகிறது இதனாலேயே தாம் இவ்விடயத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் ஜக்லண்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்கா

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ்தூதர் யாழ். வருவார்

(கொழும்பு)

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டாடபீல்ட்இருநாள் விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

### இன்றுவியாழமாற்றம்

வாக்கியப் பஞ்சாங்கப்படி இன்று வியாழன் மிதுன ராசிக்கு மாறுகிறார். திருக் கணிதப் பஞ்சாங்கப்படி (16-06-2001) மிதுனராசிக்கு இடம்பெயர்கிறார். புதிய வெளியீடு ரூபா 10/- வியாழ மாற்றம் எங்கும் விற்பனை யாகின்றது. கணிப்பாசிரியர்- சத்யா, ஆனைக்கோட்டை.
[3229]

(மானிப்பாய்)
வலி தென் மேற்கு- சண்டி லிப்பாய் பிரதேச செயலர்

### தேவை

யாழ் வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு பொதிசெய்வதற்கு ஆண் ஒருவர் தேவை 16-25 வயதிற்குட்பட்டவர் விரும் பத்தக்கதுவிண்ணப்பமுடிவுத் திகதி 20.06.2001
தொடர்பு-விளம்பரஇல 110 மே/பா.வலம்புரி (3236)

# மின் இணைப்பு பயிற்சி 22பேர் தெரிவு

பிரிவில் ஸ்ரீ லங்கா தொழிற் பயிற்சி அதிகார சபையினர் பிரதேச செயலருடாக நடாத்தும் மின் இணைப்பு பயிற்சி வகுப்பு இம் மாதம் முதல் சண்டிலிப்பாய் பிர தேச செயலகத்திற்கு முன் பாகவுள்ள கட்டடத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு 8 ஆம் வகுப்பில் சித்தி யடைந்த 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட 22 பேர் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

6 மாத காலத்திற்கு இடம் பெறும் இப் பயிற்சி ஊக்கு விப்புப் பணமாக 450 ரூபா வழங்கப்படு மென்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-120

# யாழ். மேல் நீதிமன்றுக்கு வழக்குகள் மாற்றம்

## மனித கௌரவத்திற்கான மன்றம ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு உயர் நீதிமன் றத்தில் விசாரணையில்உள்ள யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சிலரது வழக்குகளை யாழ். மேல் நீதிமன்றத்துக்கு மாற்ற மனித கௌரவத்திற்கான மன்றம் நடவடிக்கை எடுத் துள்ளது;

இதற்கமைய கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தமது அலுவல கத்துடன் தொடர்பு கொள் ளுமாறு இணைப்பாளர் ஐ. சிவராசா அறிவித்துள் ளார்.

★ கந்தையா நாகரட்ணம் நீர்வேலி வடக்கு
★ எஸ் ஜெயபாலசிங்கம் கைதடி வடக்கு
★ திருமதி ராசாத்தி ம... நாயகம் மு...வீதி, பரஅ யாலை
★ பெனாண்டோ ஜசிந்தா 7/1 புதிய வீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்
★ செல்லத்துரை கனகலிங் கம்-நாவற்குழி தெற்கு, கைதடி
★ சபாபதி சிதம்பரப் பி...-நாவற்குழி தெற்கு, கைத...
★ ...துக்குமாரசாமி ஐயர் க...சசர்மா-கைதடி வடக்கு
★ பரமநாதர் செல்வராஜ் கோயிலாக்கண்டி மத்தி, தச் சன்தோப்பு, கைதடி
★ மகேஸ்வரி நடராஜ்-நீர் வேலி மத்தி
★ திருமதி எம் கவமணி- செருக்காபுலம் சுழிபுரம்
(உ)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜுன மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்கு குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதி யாகத் தரப்படுகின்றன.

### சாவகச்சேரி

194610 ஏ

### கரவெட்டி

| | |
|---|---|
| 157966 ஏ | 158176 ஏ |
| 165018 ஏ | 165018 பி |
| 177989 ஏ | 177989 பி |
| 177989 சி | 177996 ஏ |
| 177996 பி | 180395 ஏ |
| 180395 பி | 181295 ஏ |
| 181335 ஏ | 181335 பி |
| 181335 பி | 181335 சி |
| 181335 டி | 181335 ஈ |
| 181335 எப் | 181335 ஜி |
| 185658 ஏ | 185748 ஏ |
| 185748 பி | 188309 ஏ |
| 1899 6 ஏ | 189916 பி |
| 189958 ஏ | 189996 ஏ |
| 189996 பி | 190173 ஏ |
| 190173 பி | 190264 ஏ |
| 192614 ஏ | 192617 ஏ |
| 192664 ஏ | 192664 பி |
| 192738 பி | |
| 192739 சி | 192739 டி |
| 192739 ஈ | 192753 ஏ |
| 192755 ஏ | 192755 பி |
| 192756 ஏ | 192765 ஏ |
| 192787 ஏ | 192787 பி |
| 192827 ஏ | 192827 பி |
| 192828 ஏ | 182828 பி |
| 192828 சி | 192829 ஏ |
| 192829 பி | 193792 ஏ |
| 193811 ஏ | 193856 ஏ |
| 193883 ஏ | 193894 பி |
| 193894 பி | 193894 சி |
| 193901 ஏ | 193904 ஏ |
| 193904 பி | 193909 ஏ |
| 193918 ஏ | 193918 பி |
| 193918 சி | 193926 ஏ |
| 193963 ஏ | 193967 ஏ |
| 194032 ஏ | 194047 ஏ |
| 194048 ஏ | 194049 ஏ |
| 194049 பி | 194048 சி |
| 194069 ஏ | 194063 ஏ |
| 194063 பி | 194095 ஏ |
| 194095 பி | 194108 ஏ |
| 194108 பி | 194109 ஏ |
| 194109 பி | 194109 சி |
| 194109 டி | 191110 டி |
| 194113 ஏ | 194114 ஏ |
| 194123 ஏ | 194124 ஏ |
| 194124 பி | 194124 சி |
| 194139 ஏ | 194139 பி |
| 194139 சி | 194139 டி |
| 194148 ஏ | 194160 ஏ |
| 194160 பி | 194160 சி |
| 194165 ஏ | 194165 பி |
| 194175 ஏ | 194179 ஏ |
| 194180 ஏ | 194180 பி |
| 194190 ஏ | 194494 ஏ |
| 194494 பி | 194494 சி |
| 194494 டி | 194494 ஈ |
| 194497 ஏ | 194499 ஏ |
| 194513 ஏ | 194516 ஏ |
| 194516 பி | 194517 ஏ |
| 194517 பி | 195521 ஏ |
| 194536 ஏ | 194537 ஏ |
| 194553 ஏ | 194545 ஏ |
| 194549 ஏ | 194553 ஏ |
| 194560 ஏ | 194569 ஏ |
| 194579 ஏ | 194581 ஏ |
| 194581 பி | 194581 சி |
| 194581 டி | 194587 ஏ |
| 194587 பி | 194587 சி |
| 194587 டி | 194587 ஈ |
| 197587 எவ் | 194588 ஏ |
| 194592 ஏ | .94608 ஏ |
| 194608 பி | 194612 ஏ |
| 195613 ஏ | 194614 பி |
| 194624 ஏ | 194625 ஏ |
| 194625 பி | 194532 ஏ |
| 194632 பி | 194637 ஏ |
| 194637 பி | 194643 ஏ |
| 194658 ஏ | 194663 ஏ |
| 194675 ஏ | 192676 ஏ |

| | |
|---|---|
| 194705 ஏ | 194712 ஏ |
| 194712 பி | 194743 ஏ |
| 194743 பி | 194755 ஏ |
| 194765 ஏ | 194766 ஏ |
| 194766 பி | 194780 பி |
| 196513 ஏ | 196514 ஏ |
| 196515 ஏ | 196516 ஏ |
| 196517 ஏ | 196521 ஏ |
| 196524 ஏ | 196526 ஏ |
| 196531 ஏ | 196532 ஏ |
| 196533 ஏ | 196534 ஏ |
| 196536 ஏ | 196537 ஏ |
| 196538 ஏ | 196539 ஏ |
| 196541 ஏ | 196542 ஏ |
| 196543 ஏ | 196544 ஏ |
| 196545 ஏ | 196548 ஏ |
| 196554 ஏ | 196565 ஏ |
| 196570 ஏ | 196591 ஏ |
| 196635 ஏ | 196652 ஏ |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 190293 ஏ | 194022 ஏ |
| 194022 பி | 194022 சி |
| 194022 டி | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 185370 ஏ | 188206 ஏ |
| 188516 ஏ | 188519 பி |
| 188519 சி | 188519 டி |
| 189810 ஏ | 189810 பி |
| 189999 ஏ | 190073 ஏ |
| 190073 பி | 190239 ஏ |
| 192508 ஏ | 192508 பி |
| 192551 ஏ | 192586 ஏ |
| 192586 பி | 192623 ஏ |
| 192638 ஏ | 192638 பி |
| 192687 ஏ | 192754 ஏ |
| 192766 ஏ | 192766 பி |
| 192766 சி | 192776 ஏ |
| 192746 பி | 192837 ஏ |
| 192837 பி | 193814 ஏ |
| 1938 4 பி | 193814 சி |
| 193814 டி | 193814 ஈ |
| 193814 எப் | 193845 ஏ |
| 193927 ஏ | 193927 பி |
| 193994 ஏ | 193994 பி |
| 194012 ஏ | 194020 ஏ |
| 194020 பி | 194020 சி |
| 194040 ஏ | 194079 ஏ |
| 194092 ஏ | 194092 பி |
| 194099 ஏ | 194131 ஏ |
| 194151 ஏ | 194151 பி |
| 194159 ஏ | 194159 பி |
| 194163 ஏ | 194163 பி |
| 194163 சி | 194170 ஏ |
| 194170 பி | 194491 ஏ |
| 194495 ஏ | 104495 பி |
| 194496 ஏ | 194498 ஏ |
| 194498 பி | 194533 ஏ |
| 194533 பி | 194534 ஏ |
| 194585 ஏ | 194611 ஏ |
| 194627 ஏ | 194627 பி |
| 194627 சி | 194634 ஏ |
| 194644 ஏ | 194644 பி |
| 195645 ஏ | 114647 ஏ |
| 194648 ஏ | 194648 பி |
| 194670 ஏ | 194670 பி |
| 195671 ஏ | 194672 ஏ |
| 194679 ஏ | 194679 பி |
| 194679 சி | 194681 ஏ |
| 194681 பி | 194693 ஏ |
| 194703 ஏ | 194703 பி |
| 194741 ஏ | 194741 பி |
| 194744 ஏ | 194750 ஏ |
| 194757 ஏ | 194757 பி |
| 194757 சி | 194761 ஏ |
| 194778 பி | 196518 ஏ |
| 196523 ஏ | 196525 ஏ |
| 196546 ஏ | 196549 ஏ |
| 196550 ஏ | 196552 ஏ |
| 196553 ஏ | 196555 ஏ |
| 196556 ஏ | 196557 ஏ |
| 196558 ஏ | 196559 ஏ |
| 196560 ஏ | 196562 ஏ |
| 196563 ஏ | 196564 ஏ |
| 196567 ஏ | 196568 ஏ |
| 196569 ஏ | 196581 ஏ |
| 196582 ஏ | 196583 ஏ |
| 196584 ஏ | 196585 ஏ |
| 196586 ஏ | 196587 ஏ |
| 196588 ஏ | 196589 ஏ |
| 196590 ஏ | 296592 ஏ |
| 196593 ஏ | 196616 ஏ |
| 196656 ஏ | 199478 ஏ |

# ஆக்கத்திறன் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

புதிய கல்விச் சீர்திருத்தத் திற்கு அமைவான புதுயுகத் திற்கான மாணவர் ஆக்கத் திறன் கண்காட்சி நாளை வியாழக்கிழமை மு.ப 9 30 மணிக்கு யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியா சாலையில் நடைபெறவுள் ளது.

பாடசாலை அதிபர் செ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட் சியை உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் ஆரம் பித்து வைப்பார்;

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை, ஏழாலை மகாவித்தியாலயம், ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாட சாலை, ஏழாலை தெற்கு ஸ்ரீமுருகன் பாடசாலைஆகிய குடும்பப் பாடசாலைகள் இணைந்து நடத்தும் இக்கண் காட்சியில் பிரதம தீர்ப்பாள ராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. மாதவக்குமாரும் தீர்ப்பா ளராக ஆரம்பக் கல்விஆலோ சகர் க இராமச்சந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ

# அகில இலங்கை ரீதியில் முதலிடம்

[கொழும்பு]

கொட்டாஞ்சேனை ஏ. சி. ஏ கல்வி நிறுவனத்தில் கல்வி பயின்று, ஏ. ஏ. ரி- 2000 இலங்கை பரீட்சை எழுதிய செல்விகல்பனா அரசரத்தினம் அகில இலங்கை ரீதியில் முத லாம் இடத்தைப் பெற்றுள் ளார். [உ]

# திருநாள் திருப்பலி

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அந் தோனியார் ஆலய வருடாந் தப் பெரு விழா கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகியுள்ளது

இப் பெருவிழா 9 தினங்கள் நடைபெற்று எதிர் வரும் 16ஆம் திகதிமாலை5மணிக்கு நற்கருணை ஆராதனை இடம் பெறும்.

மறுநாள் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீர் வழங்கலும் இடம் பெறும். [உ-120]

### அருட்கொடையால்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதுதான் இறைவனின் நல் லுயிருள்ள வார்த்தைகளின் படி வாழுதல். அதாவது நீதி நேர்மை, எளிமை, தாழ்ச்சி, வள்ளண்மை, இரக்கம, பக்தி எனும் பண்புகளைக் கொண்டு இறை வார்த்தை களின் படி வாழ்ந்து புனித அந்தோனியார் கரங்களில் தவழும் குழந்தை யேசுவின் அருளை புனிதரினூடு பெற்று மகிழ்வுடன் வாழ்வோமாக;


## முதலாம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



உதயம் 15-06-1928

அஸ்தமனம் 13-06-2000

அமரர்

### வைத்திலிங்கம் குமரகுரு

(முன்னாள் கிராமசபைஅங்கத்தவர், மண்டைதீவு)

குற்றமற்ற தீபமாய் ஒளி ஈந்தாய் ஐயா
குறைகளற்ற மாந்தனாய் நீர் வாழ்ந்தீர்
குணம் காக்கும் குல மகனாய் நீரிருந்தீர்
குலம் தழைக்கச் செய்து விட்டு எங்கு சென்றீர்?
நினைவிழந்து நாம் நித்தம் வாடுகின்றோம்
இன்னருள் தேடி நீர் இறையுலகம் போனீரோ!

ஆண்டொன்று முடிந்தாலும் மனம் ஆறமுடிய வில்லை ஐயா! எம் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவுமிருக்கும் தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

6ம் வட்டாரம்,
மண்டைதீவு; அண்ணாநகர், சென்னை.
[3230]

## மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணை யுடன் "வலம்புரி" பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவில் அண்ணா சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழ கமும் இணைந்து நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி.

இடம்: இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக மைதானம்.

நேரம்: பி. பகல் 4.30

மோதவுள்ள அணிகள்:

இன்று: இளம்பிறை வி.கழகம் எதிர் கலைவாணி வி.கழகம்

நாளை: தென்றல் வி. கழகம் எதிர் வராசி வி.கழகம்

(கி-2060)

### சண்டிலிப்பாய்

## பிரதேச செயலக நடமாடும்சேவை நவாலியில்

(மானிப்பாய்)

வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் நாலாவது நடமாடும் பிரதேச செயலக சேவை எதிர்வரும் 19ந் திகதி செவ்வாய் காலை 9 மணி முதல் நவாலி சென்பீற்றேஸ்றோ, க.த.க பாடசாலை மண்டபத்தில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் .நடைபெறவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் நவாலி கிழக்கு, நவாலி தெற்கு, நவாலி வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் பங்காற்றுவர்.

இச் சேவையில் சுகாதாரத் திணைக்களம், மின்சார சபை, பிரதேச சபை, விவசாயத் திணைக்களம், கல்வித் திணைக்களம், நீர்ப்பாசன இலாகா, தபாற் திணைக்களம், மீன் பிடித் திணைக்களம், வீடமைப்புத் திணைக்களம், ஆகிய வற்றின் உத்தியோகத்தர் கலந்து கொள்வர். (உ-120)

## ப.நோ.கூ.ச. கிளையை மீள இயக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்து பல மாதங்கள் கடந்த நிலையிலும், இன்னமும் அப்பகுதியில் முன்னர் இயங்கி வந்த ப.நோ.கூ. சங்கக் கிளை திறக்கப்படவில்லை.

இப்பகுதிமக்கள்நிவாரணப் பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்களை பெறுவதற்கு நீண்ட தூரம் அலைய வேண்டியிருப்பதால் கூட்டுறவுச் சங்கக் கிளையை இருபாலை கிழக்கில் மீளவும் இயக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

### காணாமற் போனோர்

## தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இருந்து 1996, 97 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் காணாமற் போனோர் சம்பந்தமாகவிசாரணைகளை நடத்தி வரும் விசேட புலனாய்வுப்பிரிவினர் பின்வருவோர் தொடர்பாக விசாரணைக்கு அவர்களின் உறவினர்கள் மற்றும் சாட்சிகளை யாழ் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

★ இளையதம்பி திருஞானச் சந்திரன் (பி-39) மந்துவில் கிழக்கு கொடிகாமம்.
முறைப்பாடு:- இளையதம்பி ஆசையம்மா
சாட்சி:- மாலினி முரளிதரன் மீசாலை மேற்கு மீசாலை.

★ கந்தசாமி புஸ்பலதா (பி-140)
மந்துவில் மேற்கு கொடிகாமம் முறைப்பாடு:- சந்தசாமி சிறிப்பிரியா சாட்சி:- கதிரன் கந்தசாமி.

★ சின்னந்தி கோபால கிருஷ்ணன் (பி-77) கைதடி தெற்கு. முறைப்பாடு:- சந்திரன் சின்னந்தி மனைவி அழைக்கப்பட்டுள்ளார்.
சாட்சி:- சுப்பையா பரமேஸ்வரன் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்.

★ ராஜரட்ணம் குணரட்ணம், ராஜரட்ணம் கேதீஸ்வரன் (பி-133) முறைப்பாடு:- குணரட்ணம் சுசிலா தேவி நாகர்கோயில் கிழக்கு சாட்சிகள்:- தாய் தந்தை நாகர் கோவில் மேற்கு கிராம சேவகரும் அழைக்கப்பட்டுள்ளார்.

★ கதிரவேலு ஜெயந்தன் ஏ-21 (1) நவாலி அரசடி முறைப்பாடு:- கதிரவேலு நகுலேஸ்வரி.

★ ராஜதுரை சுரேஸ்குமார் (பி-76) விளையாட்டு வீதி கல்வியங்காடு முறைப்பாடு:- சிவமாகி சுரேஸ்குமார் சாட்சி:- நாகையா ஜெயராஜினி.

★ யோண்பிள்ளை அன்ரன் அமலதாஸ் ஏ-21 (2) முறைப்பாடு:- மேரிஅன் கனிஸ்ரா நாவற்குழி கைதடி.

★ வல்லிபுரம் பாஸ்கரன் (பி-85) மறவன்புலோ சாவகச்சேரி இப் பகுதி கிராம சேவகர்முறைப்பாட்டுக்காரர் அழைக்கப்பட்டுள்ளனர்.

★ யோசப் கணேஸ்வரன் (பி-24) 93/3 டேவிற் வீதி யாழ்ப்பாணம். முறைப்பாட்டுக்காரர்;- கிராம சேவகரும் (ஜே-70) அழைக்கப்பட்டுள்ளனர்.

★ சந்தவனம் சிவராசா (பி-100) முறைப்பாடு:- சிவராசா ராசநாயகி உடுப்பிட்டி கிராமசேவகருக்கு அழைப்பு.

★ சின்னத்தம்பி ஞானேந்திரன் (பி-83) முகமாலைஎழுதுமட்டுவாள். முறைப்பாடு:- பரமலட்சுமி சாட்சி;- ஞானேந்திரன் சந்திரலேகா.

★ துரை தங்கத்துரை (பி-68) முறைப்பாடு;- துரை மகேஸ்வரி 125, ஏ.வி வீதி யாழ்ப்பாணம் சாட்சி;- துரைராசா பாலச்சந்திரன்.

★ கந்தையா புஸ்பராசா (பி-97) முறைப்பாடு:- வாரி கமலா கோயிலாக் கண்டி கைதடி சாட்சி:- ஜே/297 கிராமசேவகருக்கு அழைப்பு.

★ அன்ரன் தெய்வேந்திர ரமேஸ் 9, லோகநாதன் பகீரதன் (பி-9 ஏ.பி.சி) முறைப்பாடு:- தேவதாஸ் மகேஸ்வரி அம்மன் கோவிலடி சாவகச்சேரி வடக்கு மீசாலை.
சாட்சிகள்:- ரத்தின சிங்கம் பிரியதர்சன் 5, பேக்கரி வீதி கெருடாவில். அன்ரன் தெய்வேந்திரன் நாகேந்திராணி.

★ சிதம்பரப்பிள்ளை தில்லையம்பலப்பிள்ளை பொன்னம்பலம் சிவசுதன் டச்சுவீதி சாவகச்சேரி.
சிறிதரன் ராஜரட்ணம் நாகமுத்து வளர்மதி வீரபத்திர ஐயர் மோகனகுமார் நிரம்புவில் சாவகச்சேரி.

★ சதாசிவம் விவேகானந்தன் (பி-28)
முறைப்பாடு:-விவேகானந்தன் பிறேமலதா மட்டுவில் வடக்கு சந்திரபுரம்.
சாட்சிகள்:-நந்தன் (வரணி) சசிகரன் பத்மினி கந்தன் இலக்சுமி மாஸ்ரர் பரமநாதன் ஜே/315 கிராமசேவகருக்கு அழைப்பு.

★ கந்தவன் சுகதாஸ் (பி-72)
முறைப்பாடு:-பரமேஸ்வரி கோப்பாய் மத்தி கோப்பாய்

★ ஜெனாந் ஜெயகாந்தன் (பி-130)
முறைப்பாடு:-ஆசீர்வாதம் ஜெனாந் 218, குருஸ் வீதி யாழ்ப்பாணம்.

★ சின்னத்தம்பி சிவகுமார் (பி-13)
முறைப்பாடு ; சிவகுமார் விஜயகுமார் நாவற்குழி வடக்கு தச்சன்தோப்பு. (உ-10)

### விடுதலைப் புலிகளின்

## நடமாடும் மருத்துவ சேவையில் 4 ஆயிரத்து 933 பேருக்கு சிகிச்சை

[வவுனியா]

விடுதலைப்புலிகளின் நடமாடும் மருத்துவசேவைப் பிரிவினர் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் சுமார் 4 ஆயிரத்து 933 பேருக்கு சிகிச்சையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்த சோகையினால் பாதிக்கப்பட்ட 747 பேரும் காசநோயினால் பாதிக்கப்பட்ட 56 பேரும் கண் நோயினால் பாதிக்கப்பட்ட 64 பேரும் சிகிச்சையளிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

செம்மண்குன்று, ஈச்சிலம்பட்டி குடியிருப்பு, இராஞ்சி, பலாலி, திருநகர் ஆகிய பல இடங்களில் இந்த நடமாடும் வைத்திய சேவை நடத்தப்பட்டது. [ம]

## தமிழ் விழா

(கோப்பாய்)

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்ச்சங்கம் நடத்திய தமிழ் விழா, கல்லூரி சபாபதி நாவலர் அரங்கில் கடந்த திங்கட்கிழமை சங்கத் தலைவர் கு. செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்கவிஞர்இ.முருகையன் பிரதம விருந்தினராகவும்,இ மனோகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். [இ]

## இராசி பலன்

13-06-2001
(வைகாசி 30, புதன்)
சப்தமி மாலை 6.02 வரை
சதயம் பி.ப 12.56- வரை
இராகுகாலம் 11.52- 1.22
நல்லநேரம் 4.22- 5.52
சித்தாமிர்தம்.

**மேடம்**
தனவரவு, நண்பர்கள் சந்திப்பு, பெருமை, முயற்சி நன்மை.

**இடபம்**
தொழில் சிந்தை, நல்ல செய்தி, பணியாளர் உதவி, காரியம் கைகூடும்.

**மிதுனம்**
அமைதிக் குறைவு, கட்டுப்பாடு, புதிய திட்டமிடல், போசன சுகம்.

**கடகம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், அவமானம், பிரயாண பயம்.

**சிங்கம்**
சுவாரஸ்யம், அபூர்வ சந்திப்பு, விருந்துபசாரம், காரிய அனுகூலம்.

**கன்னி**
ஆரோக்கிய நிலை, திடீர் பயணம், மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும்.

**துலாம்**
குடும்பக் கவலை, திடீர் நன்மை, வியாதி, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சி தாமதம், ரோகம், கல்விச் சிறப்பு.

**தனுசு**
இனிய சம்பவம், தனவரவு, அந்நியர் சந்திப்பு, வாக்குப் பலிதம்.

**மகரம்**
பொருள் விரயம், மாதர் நட்பு, மதிப்புக் குறைவு, காரிய தாமதம்.

**கும்பம்**
கற்பனை மிகுதி, மதிக்கப் படுதல், சயன சுகம், முயற்சி கைகூடும்.

**மீனம்**
உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், நித்திரைக் குறைவு, பொருள் விரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## நோர்வே- இந்திய தூதர்கள் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் த்ரொப் ஜோன் ஜக்லண்ட் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியை சந்தித்த அதேநேரம் பேச்சுக்கு அழைக்கப்படாத நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம்எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரம சிங்காவைச் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தற்போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தியைச் சந்தித்துப் பேசியதாகவும் தெரியவந்துள்ளது.

இருவரும் தத்தம் சந்திப்புகளின்போது பேச்சுவார்த்தை தொடர்பாக எழுந்துள்ள முட்டுக் கட்டைகளையும், அதனைப் போக்குவதற்கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறியதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## புதுயுக வழிகாட்டல் கண்காட்சி இரு தினங்கள்

[மந்திகை]

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்தினை வெளிப்படுத்தும் ''புதுயுகத்திற்கான வழிகாட்டல்'' கண்காட்சி எதிர்வரும் சனி, ஞாயிறு இரு தினங்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் சி. சிற்றம்பலம் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

16 ஆம் திகதி பாடசாலை மாணவர்களும் 17 ஆம் திகதி ஏனையவர்களும் கண்காட்சியைப் பார்வையிடலாம்மென வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். [உ-23]

### புங்குடுதீவு கிராம

## அபிவிருத்திச் சங்கத்திற்கு 80 ஆயிரம் கடனுதவி

[திருநெல்வேலி]

வடக்கு- கிழக்கு மாகாண அமைச்சு வேலணை பிரதேச செயலர் ஊடாக புங்குடுதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு ஆடுகள் வளர்ப்பதற்கு 80 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவீதம் 16 உறுப்பினர்களுக்கு இப்பணம் பகிர்ந்து வழங்கப்பட்டதாக வேலணை பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சுந்தரலிங்கம் தெரிவித்தார். [உ-127]

## கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறச் செல்வோர் அதிகரிப்பு

(கோப்பாய்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் செல்வோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கோப்பாய்ப் பகுதியில் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதே இதற்குக் காரணமாகும்.

இதேவேளை, மருந்து கட்டும் துணிக்கு வைத்தியசாலையில் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-79)

### நீதிமன்றம் முன்பாக

## திருட்டுப் போன சைக்கிள் மீட்பு

[யாழ்ப்பாணம்]

நீதிமன்றின் முன்பாக நிறுத்தப்பட்ட வேளை திருட்டுப் போன சைக்கிள் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

கடந்தவாரம் திருட்டுப் போன இச்சைக்கிள் பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சில தினங்களுக்கு முன் யாழ் ரெலிகொம் நிறுவனத்தின் முன்பாக உரிமை கோரப் படாத நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

பின்பு நீதிமன்றில் அதைப் பாரப்படுத்தியதற்கிணங்க யாழ்ப்பாணம் பதில் நீதிபதி பா. சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம்உரிமையாளரிடம் ஒப்படைத்தார். உ-6

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல-21

### ஆக்கம்: சுந்தர்

★ அஞ்சு, தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன் ஆவான். ஒரு நாள் காலை நேரந் தாழ்த்திப் பாடசாலைக்குச் சென்று ஆசிரியரின் கண்டனத்திற்கு உள்ளானான் அஞ்சு நேரந் தாழ்த்திப் போனமைக்கான சில காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன அதில் பொருத்தமான காரணத்தை புள்ளிக் கோட்டின் கீழ் எழுதுக.

1) கொதித்தாறிய நீரை அருந்தியமை
2) தங்கையுடன் ஏற்பட்ட முரண்பாடு
3) திடீரென ஏற்பட்ட வயிற்றுவலி
4) நகங்களை வெட்டி சுத்தமாக இருந்தமை
5) சீருடைய அழுத்தி ஆயத்தப்படுத்தலில் ஏற்பட்ட தாமதம்

1) ——————
2) —— ——————
3) ——————

★ சரியான விடையின் கீழ் கீறிடுக.

4) சூரியன் ஒளிரும் பொருள் போல சந்திரன்
   1) ஒளிரும் பொருள்
   2) ஒளிராப் பொருள்
   3) இரவில் மட்டும் வானில் இருக்கும் பொருள்
5) மண்ணைப் பாதுகாக்கும் மனிதனின் ஒரு நடவடிக்கை
   1) பொலித்தின். வகைகளை மண்ணில் புதைத்தல்
   2) இலை. குழை, சருகு. குப்பை, மாட்டுச் சாணம் ஆகியவற்றை மண்ணுள் புதைத்தல்
   3) களை கொல்லிகளை மண்ணின் மீது வீசுதல்

★ இப் பந்தியை வாசித்து விடை தருக.

'அடிக்கடி இடமாற்றம் செய்யப்படாத பூச்சாடிகள் நிலையாகக் காணப்படும். பெருங்கல்லின் கீழ் சிறிய பிராணிகள் சீவிப்பதைக் காணலாம், அவற்றினிடையே விஷப் பிராணிகளும் காணப்படும் அவை எல்லாம் நிழலை நாடியே வாழ்கின்றன

6) இத்தகைய இடங்களில் வாழும் பிராணிகளில் நிலத்திலும், நீரிலும் வாழும் இயல்பு கொண்ட ஒரு பிராணியும வாழலாம் அதன பெயரை எழுதுக?
7) கல்லின் கீழ்க் காணப்படும் பிராணிகளில் விஷப்பிராணி அல்லாதது எது?
   1) பாம்பு 2) பூரான்
   3) மட்டைத்தேள் 4) அட்டை
8) கற்களின் கீழ் புதிதாக முளைக்கும் தாவரம் ஒன்று காணப்படின் அதன் இலையின் நிறம் யாது?
   1) பச்சை 2) கரும்பச்சை
   3) மஞ்சள் 4) சிவப்பு
9) இப் பிராணிகள் இவ்விடங்களில் இருப்பதற்கான காரணம்
   1) ஈரலிப்பு 2) பாதுகாப்பு
   3) நிழல் 4) மேற்கூறிய மூன்றும்

★ சரியான விடையின் கீழ் கோடிடுக.

10) அடிக்கடி என்பது (இணை மொழி, இரட்டைக்கிளவி) ஆகும்
11) அடிக்கடி என்பதன் கருத்து (எப்போதும், உடனுக்குடன்) என்பதாகும்
12) மாதவன் வடக்கு நோக்கிச் செல்லும் போது நிழல் அவருக்கு வலது பக்கமாக விழுந்தது இப்போது நேரம் அண்ணளவாக
   1) காலை 10 மணி 2) நண்பகல் 12 மணி
   3) மாலை 4 மணி
13) தபாலுறை ஒன்றின் வலது மேல் மூலையில் காணப்படுவது
   1) அனுப்புவர் முகவரி 2) முத்திரை
   3) பெறுபவர் முகவரி

★ கோலத்தை அவதானித்து விடை தருக.

14) 0 0001, 0 001, 0.01, ——————
15) 15. 30, 45, 60, ——————
16) அனுபவமற்ற அறிவு பயன்படாது
   1) குறைகுடம் தழும்பும் நிறைகுடம் தழும்பாது
   2) ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது
   3) ஆறிய சஞ்சி பழங்கஞ்சி
17) நடை, உடை, பாவனைகள் மாற்றிக் கொண்டாலும் அடிப்படை இயல்பு மாறாது
   1) கானமயிலாட கண்டிருந்த வான்கோழி தானும் ஆடிப்பார்த்தது
   2) உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
   3) கேடுவரும் பின்பே மதி கெட்டுவரும் முன்னே;
18) இங்கு வேலை வாய்ப்பு வசதி இருந்தும் வேலை தேடி வெளிநாடு செல்கின்றனர்.
   1) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
   2) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
   3) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு

★ கீழ்வருவனவற்றை ஏதோ ஒரு இயல்பின் அடிப்படையில் ஒழுங்கு பண்ணி நடுவில் வரும் சொல்லை எழுதுக.

19) ஆண்டு, வாரம், மணி, நாள், மாதம்
20) மாலை, மதியம், காலை, இரவு, நள்ளிரவு
21) திங்கள், வெள்ளி, வியாழன், புதன், செவ்வாய்
22) நாவற்பழம், வாழைப்பழம், பலாப்பழம், அன்னாசிப் பழம், தேசிப்பழம்
23) அழகான பூச்சிகள் பல வர்ணம் கொண்டது
   ண், த், ண, சி, பூ, ன, ப், ா, ச், து, வ ——————
24) எரிபொருள் இன்றி இயங்கும் போக்குவரத்துச் சாதனம்
   வி, ச, ர, வ, க, ண், க், ச், து, டி ——————

# புலமைப் பரிசில் பரீட்சை
## வினா இல- 20
### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) வ. ஜயந்தன், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
02) ப. சஜிந்தன், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
03) ச. கணேஸ்பரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
04) யோ. செபஸ்ரியன், மாகியப் பிட்டி றோ. க. த. க. பாடசாலை
05) ச. சாகீர்த்தன், தாவடி இ. த. க. பாடசாலை
06) சி. ஜெயதாரகா, கம்பர்மலை அ. த க. பாடசாலை
07) ந. சாளினி, கரவெட்டி ஞானா சாரியார் கல்லூரி
08) து. தர்ஷிகா ஆனைக்கோட்டை அ. த. க. பாடசாலை
09) ஞா. அன்ரனி தர்ஷிக், மயிலிட்டி றோ; க. வித்தியாலயம்
10) அ. கடோற்ஜன், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
11) சு துவாரகன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
12) நி. பிரசாந் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்
13) இ. பாமா, துன்னாலை மெ. மி. த. க பாடசாலை
14) மோ மதன், வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
15) ஆ. திவ்வியா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
16) ஸ்ரீ அபிராமி, சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை
17) அ. வஜீகரன், பரியோவான் கல்லூரி
18) தி. துவாரகன், கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
19) க. கஜந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
20) இ பிரதிகா, சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
21) கு. சிந்துஜா, வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
22) பி. பிரதீபா, வல்வை சிவகுரு வித்தியாலயம்

(மிகுதி நாளை தொடரும்)

25) இன்று சனிக்கிழமை 16 ஆம் திகதி எனின் இம்மாதம் 21 ஆம் திகதி என்ன கிழமை வரும்

★ கீழே சில பாடல்கள் தரப்பட்டுள்ளன அவற்றின் விடுபட்ட வரிகளை எழுதுக.

26) சிறுநண்டு மணல் மீது படமொன்றை கீறும் சில வேளை அதை வந்து ——————
27) கடல் மீது அவள் கொண்ட ——————
28) தலைவாரிப் பூச்சூடி —————— போ என்று சொன்னார் உன் அன்னை
29) சிலை —————— நீ
30) சிந்தாத ——————

★ சரியான விடையின் கீழ்க் கோடிடுக

அன்புள்ள அம்மா,

நான் சுகமே உள்ளேன். உன் சுகம் வேண்டித் தொழுகின்றேன் கடல் கடந்து வாழும் எனக்கு உன் நினைவே பாதுகாப்பு மேலும் ———

31) மேலே சொல்லப்பட்ட வாக்கியங்கள் எங்கிருந்து பெறப்பட்டிருக்கலாம்?
   1) தொலைபேசி 2) கடிதம் 3) தந்தி
32) இவ்வாக்கியத்தோடு தொடர்புடையவர் வாழ்வது
   1) உள்நாடு 2) கடலில் 3) வெளிநாடு
33) இங்கு ஒரே சொல் இரு தடவை பாவிக்கப்பட்டுள்ளது. அச்சொல் எது?
   1) நான் 2) உன் 3) எனக்கு
34) மேலே சொல்ல வந்த விடயம்?
   1) நிறைவடைந்தது 2) நிறைவடையவில்லை
   3) சொல்வது கடினம்
35) ''AMBULANCE'' என்னும் சொல்லில் அதிக தடவை எழுதப்பட்டுள்ள எழுத்து?
   1) A 2) C 3) U
36) பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுப்போட்டி
   1) வெய்யில் காலமாகையால் நோய்களையும் பண விரயத்தையும் ஏற்படுத்துகின்றது.
   2) பாடத்தில் பின்னடைவான மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது:
   3) வெற்றி தோல்விகளை ஏற்கும் மனப்பக்குவத்தை வளர்க்கின்றது;
37) காதுக்கு ஒலி போல கண்ணுக்கு?
   1) தொலைக்காட்சி 2) பார்வை 3) கண்ணீர்
38) உச்சி 4, விளிம்பு 6, முகம் 4 உடைய உரு?
   1) நான்முகி 2) கனவுரு 3) உருளை
39) எல்லா மதத்தவர்களும் போற்றி வழிபடும், இலங்கையில் உள்ள மலை ஒன்றின் பெயரைத் தருக?
40) இலங்கையின் தேசிய மலர் எது?

**குறிப்பு :-**

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 18-06-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**கல்விப் பகுதி**
**வினா இல- 21**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ……………………
சொந்த முகவரி: ……………………
கற்கும் பாடசாலை : ……………………
மாணவர் கையொப்பம் : ……………………

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# புலமைப் பரிசில் பரீட்சை
## வினா இல-20
### விடைகள்

01) பூக்கள்
02) சூரியன்/காற்று
03) நறு/தென்றல்
04) முகம்/அழகு
05) உற்சாகம்/நன்மை
06) தாலாட்டு
07) கும்மி
08) வண்டி
09) மழை
10) வயல்
11) XL
12) XXXIX
13) XXVIII
14) XIX
15) சகோதரி
16) பாடசாலை
17) கிழமை
18) தலை
19) Leg
20) Blue
21) Wednesday
22) Flowers
23) இலையுள்ள
24) செடி
25) கொடி
26) கிளையுள்ள
27) கிளையற்ற
28) கொடி
29) கிளையற்ற
30) கிளையற்ற
31) பிழை
32) சரி
33) பிழை
34) சரி
35) சரி
36) சாந்தகப்பை
37) உளி
38) வெண்கட்டி
39) மண்வெட்டி
40) கலப்பை

## மாணவர் இரவல் பகுதி ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

திக்கம் மத்திய சனசமூக நிலைய மாணவர் இரவல் பகுதி ஆரம்பவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பா: தணிகைவேள் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் கே: மகேந்திரன் பிரதம விருந்தினராகவும், யா/போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் க: இளங்கோ ஞானியார் மற்றும், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை பல் வைத்திய நிபுணர் வே. ஜெயராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர் (உ)

## கண்காட்சி

(கோப்பாய்)

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய கற்றல்-கற்பித்தல்உபகரணக் கண்காட்சி நேற்றைய தினம் அதிபர் வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெற்றது; (உ-79)

## கூட்டுப் பிரார்த்தனை

[திருநெல்வேலி]

திருநெல்வேலி கலாமன்றத்தின் 145 ஆவதுஆண்டுகூட்டுப் பிரார்த்தனை நிகழ்வு கடந்தவாரம் ஆசிரியர் பரமநாதன் தலைமையில் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. [உ-127]

## ஆங்கிலத்தின விழா

[திருநெல்வேலி]

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் ஆங்கிலத்தின விழா அதிபர் ப. மார்க்கண்டு தலைமையில் அண்மையில் நடைபெற்றது. [உ-127]

### இன்று ஒரு தகவல்

# உண்மையில் பாவம் எது?

ஒருவன் திருடி விட்டுச்சிறை சென்றான். சிறைச்சாலை அதிகாரி 'என்னப்பா அதற்குள்ளே திரும்பி வந்துவிட்டாய் என்றார்' 'வேறுவழியில்லை' என்றான் அவன். 'சரி இந்தத் தடவை ஏன் தப்பு பண்ணினாய்' என்று விசாரித்தார். பகல் நேரத்தில் ஆளில்லா வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தேன். அகப்பட்டுக் கொண்டேன். அது தான் இங்கே கொண்டு வந்துவிட்டு விட்டார்கள்;' என்றான், 'அடப்பாவி முன்னாளிலெல்லாம் இரவில் தான் திருடிக் கொண்டிருந்தாய் இப்போது பகலிலேயே திருடுகிறாயே! இது நியாயமா? என்று கேட்டார். 'போங்கசார்! எவ்வளவு நாள் தான் நான் கண் விழிக்கிறது.' என்றான்.

இவனுக்கு இப்போதெல்லாம் தான் செய்கிறது பாவம் என்றே புரிகிறதில்லை. முதல் தடவை வேறு வழியில்லாமல் ஒரு இடத்தில் திருடினான். பசிக்கொடுமை, பசித்தபோது திருட ஆரம்பித்தவன் இப்போது பசி இல்லை என்றால் கூட திருடாமல் இருக்கமுடியவில்லை! என்னடா என்று கேட்டால்' தலைக்கு மேலே வெள்ளம் போய் விட்டது. இனிமேல் சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன?' என்று கேட்கிறான். தொடர்ந்து ஒருவன் பாவம் செய்கிறதற்கே இது மாதிரி மனோபாவம்தான்காரணம்.

ஒருவன் வேறுவழியில்லாமல் ஒரு நிர்ப்பந்தத்தினால் தவறு செய்கிறது போல் ஆகிவிட்டதென்றால் அது பாவமில்லை. ஆனால் நிர்ப்பந்தமில்லாமல், வேணுமென்றே தவறு செய்வது பாவம். பல காலங்களுக்கு முன்னர் 'உஷஸ்தி' என்று ஒரு முனிவர் இருந்தார். ஒரு சமயம் ஆலங்கட்டி மழை பெய்து ஊரில் பயிர்களெல்லாம் அழிந்து போனது: எங்கே பார்த்தாலும் பஞ்சம் பசி, இந்த முனிவர் பல நாள் பட்டினி கிடந்தார் ஊர்பூராவும் பட்டினி கிடக்கிற பொழுது முனிவருக்கு மட்டும் என்ன கிடைத்து விடப் போகிறது? எப்படியோ பல்லைக்கடித்துக் கொண்டு இருந்துபார்த்தார். ஒரு கட்டத்திற்கு மேல் அவரால் தாங்க முடியவில்லை. என்ன செய்வதென்றுயோசித்தார். அந்தச் சமயத்தில்ஒரு யானைப் பாகன் அந்தப் பக்கமாக வந்தான். அவன் எதையோசாப்பிட்டுக்கொண்டிருப்பது மாதிரித்தெரிந்தது. முனிவர் அவனைப் பார்த்து 'ஏதாவது இருந்தால் கொடு' என்றார்.

யானைப்பாகன் முனிவரை இரக்கத்தோடு பார்த்தான். 'ஐயா! நான் எச்சில்படுத்தின உழுந்துதான் இருக்கிறது. அதை உங்களுக்கு எப்படிக் கொடுக்கிறது' என்று இழுத்தான். 'பரவாயில்லையப்பா கொடு' என்றுசொல்லி அவன் கொடுத்த எச்சில் உழுந்தை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தார், அடுத்தபடியாக 'இந்தாங்க! இந்தத் தண்ணீரைக் குடியுங்கள்' என்று சொன்னான் யானைப்பாகன். 'அது எச்சில்! நான் குடிக்கமாட்டேன்' என்றார் முனிவர். யானைப்பாகனுக்கு ஒன்றும் புரியவில்லை.

'என்ன சுவாமி! என் எச்சில்பட்ட உழுந்தை மட்டும் சாப்பிடுகிறீர்கள். தண்ணீரை வேண்டாமென்கிறீர்கள்' என்றுகேட்டான். 'இப்போது வேறு எங்கேயும் அன்னம் கிடைக்கவில்லை. இதைச் சாப்பிடவில்லையென்றால் என் உயிர் போய்விடும். ஆனால் தண்ணீர் எங்கும் கிடைக்கும். அதனாலே உன் எச்சில் தண்ணீரை நான் குடிக்கமாட்டேன்' என்றார் முனிவர்.

இந்தக் கதையைக் கேட்கும் போது, நம்மில் பலருக்குச் சிரிப்புவரலாம்! உழுந்துக்கு இல்லாத எச்சில் தண்ணீருக்கு மட்டும் வந்துவிட்டதோ? என்று கேட்கலாம்! அப்படியெல்லாம் கேட்கக் கூடாது இதில் உள்ளதத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் ஒரு நிர்ப்பந்தமும் இல்லாதபோது பாவம் செய்கிறவன். அதைத்தொடர்ந்து செய்து கொண்டேயிருப்பான் அதற்கு எல்லையேயிருக்காது என்பதுதான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம். எவ்வளவுதான் தத்துவவிளக்கம் கொடுத்தாலும் சிலர் சுபாவத்தை மாற்றவே முடியாது மிகவும் கஷ்டம்.

நமது ஆள் ஒருவன் கோட்டுக்குப் போனான். அவனைக் கூண்டில் ஏற்றினார்கள். ஏறி நின்றான்- முதல் ஒருவர் அவனிடம் வந்தார். 'நான் சொல்கிறதெல்லாம் உண்மை உண்மையைத்தவிர வேறு எதுவும் இல்லை' என்று சொல்லென்றார். இவன் மெதுவாக அவரை நிமிர்ந்து பார்த்து 'ஆரம்பத்திலேயே என்னைப் பொய் சொல்லச் சொல்கிறீர்களே' என்றான்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சபாநாயகர் அனுரா இந்தியா செல்லமாட்டார்

(கொழும்பு)

இந்தியாவின் வில்ரன் பூங்காவில் பொது நலவாய பாராளுமன்றச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் சபாநாயகர் அனுரா பண்டார நாயக்கா பங்குபற்ற மாட்டாரென சபாநாயகர் அலுவலகம் நேற்று அறிவித்தது.

முன்னர் இக் கருத்தரங்கில் பங்கு பற்ற சபாநாயகர் இந்தியாவுக்கு செல்லவுள்ளாரென செய்திகள் வெளியான போதும். தற்பொழுது பாராளுமன்றில் பல பொறுப்பு வாய்ந்த பணிகளை அவர் நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளார்.

அரசாங்கத்தின்மீது ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத்தீர்மானம் மற்றும் அரசு விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகள் குறித்த பல முக்கிய விடயங்களைக் கையாள வேண்டிய பொறுப்பு உள்ளதாலேயே அவர் கருத்தரங்கில் பங்குபற்றவில்லையெனத் தெரியவருகிறது. இதேவேளை இக் கருத்தரங்கு எதிர்வரும் 15ஆம் திகதிவரை நடைபெறும். (இ)

# திக்கம் வடிசாலையில் மேலதிக கள் கொள்வனவு

(மந்திகை)

திக்கம் வடிசாலையில் மதுபான உற்பத்தி செய்வதற்காக நேற்று முன்தினம் மேலதிக கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாக வடிசாலைப் பொது முகாமையாளர் பரஞ்சோதி ரவீந்திரன் தெரிவித்தார்.

கள் அதிகமாகக் கிடைக்கும் காலமாகையினால், ஏராளமான கள் வீணே ஊற்றப்படுவதைத் தவிர்க்கும் வகையிலும்,

வடிசாலையின் பணிகளை விஸ்தரிக்கும் வகையிலும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த பொது முகாமையாளர்.

அனைத்து தென்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களையும் அதிகளவு கள்ளினை வழங்கி மதுபான உற்பத்தி அதிகரிப்பிற்கு ஒத்துழைப்பதோடு, சீவல் தொழிலாளர்களின் வாழ்வு சிறக்க உதவுமாறு கேட்டுள்ளார்:

(உ-23)

## கொழும்பில் இருந்தபடியே
# கௌரவம் பேசுகின்றவர்களுக்கு படையினர் மனநிலை புரிவதில்லை

## பொலிஸ் அதிகாரி சீற்றம்!

[கொழும்பு]

யுத்தம் நிறுத்தப்படுவதையே நாம் பெரிதும்விரும்புகின்றோம். இதனைத் தொடர்ந்து நடத்துவதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

இதுபற்றி அரசு, விடுதலைப் புலிகள் தரப்பின் உயர் மட்டங்கள் சிந்தித்து எப்படியேனும் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு, தலைமன்னாரில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் இவ்வாறு தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்:

தனது கருத்தை அவர் தொடர்ந்து வெளியிடுகையில்,

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதால் எந்த நன்மையும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

நாம் ஒவ்வொரு நாளையும் அச்சத்துடனேயே கழித்துக் கொண்டிருக்கின்றோம்; இவ்வாறு நித்தமும் நாம் அச்சமடைந்தபடி கடமை புரிவதால் தொழில்மீதே வெறுப்பு ஏற்படுகின்றது.

கொழும்பில் இருந்தபடியே பேசுவது போல் இங்கு யுத்தப் பிரதேசத்தில் சூழ்நிலை இல்லை. ஒவ்வொரு மனிதனும்உயிர்வாழத்தான்ஆசைப் படுகிறான்.

சுதந்திரமாக நிம்மதியாக வாழ்வதுதான் எமக்குத் தேவை. இல்லாத ஒன்றைக் கற்பனைசெய்து கொண்டு, அதற்காக யுத்தம் செய்து கொண்டிருப்பதில் என்ன இலாபம்?

தமிழ்மக்களைநாம்விரோதிகளாக நினைக்கவில்லை. நாம் தமிழ் பேசவும் தமிழ் மக்களுடன் பழகவும் விரும்புகின்றோம். இன்று யுத்தம் செய்தாலும் சமாதானம் ஏற்பட்ட பின்னர் நாட்டில் வாழப் போவது தமிழ், சிங்கள மக்களே;

கொழும்பில் ஏ.சி: அறைகளில் இருந்து கௌரவம் பேசுபவர்களுக்கு சூழ்நிலையின் பயங்கரமும் படையினரின் மனநிலையும் புரிவதில்லை.

படையினர் மனவிரக்தி அடைந்தால் பல விதமான குழப்பங்கள் ஏற்படலாம் என்று மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்: [உ]

# நீர் விநியோகம் ஆரம்பம்

(மானிப்பாய்)

வடலியடைப்பு கலைவாணி முன் பள்ளி நிலையத்தில் நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இன்று பி.ப 4 மணிக்கு கலைவாணி ச.ச நிலையத் தலைவர் க.தர்மராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக வலி. தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனும் சிறப்பு விருந்தினராக வலி. தென் மேற்கு பிரதேச சபை செயலாளர் பி விக்டரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-120)

# சந்தேகநபர் சிறையில் மரணம்

(கண்டி)

மாவனல்லைசம்பவத்துடன் தொடர்புடைய 'சந்தேகநபர் ஒருவர் கேகாலைச் சிறைச்சாலையில் மரணமடைந்துள்ளார். இதுதொடர்பான விசாரணையைமேற்கொள்ளுமாறு சிஹலஉறுமயகட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

செனரத்பண்டா அழககோன் என்ற சந்தேகநபரே மரணமானவராவார். (ம)

# கொழும்பில் சுற்றிவளைப்பு

[கொழும்பு]

கொழும்பு லத்தளைப்பகுதியில் நேற்றுஅதிகாலை திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளபபட்டது.

இச்சுற்றிவளைப்பின்போது ஒருபெண் உட்பட 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்டவர்களில்சிலர் விசாரணையின்பின் நேற்று பிற்பகல் விடுவிக்கப் பட்டனர். ஏனையோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்; [ம]

# வலி- கிழக்குப் பிரதேச அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல்

(கோப்பாய்)

வலிகிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்தில் 'பிரதேச அபிவிருத்தியும் பராமரிப்பும்' என்னும் விடயம்பற்றி அப்பகுதி பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடலொன்று அண்மையில் இடம் பெற்றது.

வலி கிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ.குணசிங்கம்தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் 2001ஆம் ஆண்டு காலாண்டு அபிவிருத்தித் திட்டம் பற்றி ஆராயப் பட்டது.

அத்துடன் இருபாலைச் சந்தியில் பொதுச் சந்தையொன்றைஅமைப்பது, இருபாலை இந்து மயானத்தைப் புனரமைப்பது, கோப்பாய்ப் பகுதியில் கணனிப் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிப்பது, மற்றும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையை பொது அமைப்புக்களுடன் இணைந்து முன்னெடுத்தல், ஆகியவிடயங்கள் பற்றி கலந்துரையாடி முடிவெடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில்வலி கிழக்கு பிரதேச சபை உப தலைவர் யு. எல். ஏ. ரவி, கோப்பாய் அபிவிருத்திச் சபைத் தலைவர் எஸ். தங்கவடிவேல், கோப்பாய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ். சிவதாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்; (இ)

## எஸ். எல். ஏ. எஸ். பரீட்சைக்கான
# வயதை அதிகரிக்குக ஜோசப் எம். பி. கோரிக்கை

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கென விசேடமாக நடைபெறவிருக்கும் சிறிலங்கா நிர்வாகசேவை ஆட்சேர்ப்புக்கான திறந்தபோட்டிப்பரீட்சை வயதெல்லையை 32ஆக உயர்த்த வேண்டும் என்றும் அரச சேவையிலுள்ள பட்டதாரிகளின் வயதெல்லை நீக்கப்படவேண்டும் அல்லது 42 ஆக உயர்த்த வேண்டும் எனவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கேட்டுள்ளார். இது தொடர்பாக அவர் அனுப்பிய கடிதத்தில்,

தற்போதைய யுத்த சூழ்நிலைகளினால் பட்டப்படிப்பை முடிப்பதற்கு 3 அல்லது 4 வருடங்களைமேலதிகமாகச் செலவு செய்ய வேண்டி இருப்பதால் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வயதை 30இல் இருந்து 32ஆக அதிகரிக்க வேண்டுமென்றுசுட்டிக்காட்டியுள்ளார்; (வ)

# சைவநெறித் தேர்வு 42, 500 பேர் சித்தி

[யாழ்ப்பாணம்]

யாழ். சைவபரிபாலன சபையினால்கடந்த 2000ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் தோற்றிசித்தியடைந்தபாடசாலைமாணவர்களுக்கான சான்றிதழ்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்குஅனுப்பப்பட்டுவருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 348 பாடசாலைகளைச் சேர்ந்த 58 ஆயிரத்து 416 மாணவர்கள் விண்ணப்பித்த போதிலும்,

50 ஆயிரம் மாணவர்கள் மாத்திரமே பரீட்சைக்குத் தோற்றியதாகவும் இவர்களில் 42ஆயிரத்து 500 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாகவும் சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்தார்; (உ-6)

## முஸ்லிம் கெரில்லாக்களின் கோரிக்கைக்கு அடிபணிய அரேரயோ மறுப்பு

(மணிலா)

மலேசியர் ஒருவரை பேச்சு வார்த்தை நடத்துவதற்கு 72 மணிநேரத்துக்குள் அனுப்பா விட்டால் சிறைப்பிடிக்கப் பட்ட 3 அமெரிக்கர்களின் தலையும் துண்டிக்கப்படும் என பிலிப்பைன்ஸில் உள்ள முஸ்லிம் கிளர்ச்சிக் காரர்கள் பிலிப்பைன்ஸ் அரசுக்கு காலக் கெடு விடுத்துள்ளனர்.

ஆனால் ஜனாதிபதி அரேரயோ வெளிநாட்டுப் பேச்சாளர் ஒருவரை ஏற்பாடு செய்ய மறுத்திருப்பதுடன், உள்நாட்டைச் சேர்ந்த ஒருவரை பேச்சு நடத்த அரசாங்கம் நியமித்திருப்பதாகவும் பணயக் கைதிகளை மீட்ப தற்கு பணம் கொடுக்க முடியாது எனவும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்

இதே சமயம், பணயக் கைதிகளை மீட்கும்இராணுவ நடவடிக்கையும் தொடாந்த வண்ணம் இருக்கின்றதும், பிலிப்பைன்ஸ் துருப்புக்கள் மேற்கொண்ட ஒரு அதிரடித் தாக்குதலில் இரண்டு கெரில்லாக்கள் சுட்டுக்கொல்லப் பட்டதுடன் மூவர் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. [உ-9]

## தீவிரவாதிகள்-பொலிஸார் மோதல் 17 பேர் பலி

(புதுடில்லி)

தென் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் இடது சார்புடைய சட்டவிரோதக் குழு ஒன்றிற்கும் இந்தியப் பொலிஸாருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 17 பேர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் போர்க்குழு என்ற மேற்படி தீவிரவாத அமைப்பின் 13 பேரைப் பொலிஸார் கொன்ற அதேவேளை இம் மோதல்களில் சிக்கி 4 பொது மக்களும் உயிரிழந்துள்ளனர்.

கடந்த .0 வருடமாக மேற்படி தீவிரவாத அமைப்பிற்கும் பொலிஸாருக்கும் இடையில் நடைபெற்றுவரும் மோதல்களில் குறைந்தது 6 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## புதிய தாக்குதலை தலிபான் தொடங்கியது

[காபூல்]

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் அமைப்பு தாங்கள் இழந்த யகாவாவ் நகரை மீண்டும் கைப்பற்றும் முகமாக புதிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட இத் தாக்குதல் நடவடிக்கை இந்த வாரமும் தொடர்ந்து நடைபெறுவதாகவும் இத்தாக்குதலின் மூலம் இழந்த பிரதேசத்தின் ஒரு பகுதியை தாங்கள் கைப்பற்றி உள்ளதாவும் ஆளும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர். [உ-9]

## இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சராக ஜாக்ஸ்ரோ நியமனம்

(லண்டன்)

பிரித்தானியாவில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பிளயர் மீண்டும் வெற்றி பெற்றதையடுத்து தனது அமைச்சரவையில் ஜாக்ஸ்ரோவை புதிய வெளியுறவு அமைச்சராக நியமித்துள்ளார்.

ஜாக்ஸ்ரோ முன்பு உள்த்துறை அமைச்சராக கடமையாற்றினார். முன்னைய அமைச்சரவையில் ரொபின் குக் வெளியுறவு அமைச்சராக பதவியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-9]

## சமாதானப் பேச்சுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

### கூரியத்மாநாட்டுக்கட்சி தெரிவிப்பு

[ஸ்ரீநகர்]

காஷ்மீரில உள்ள பிரதான பிரிவினைவாத அரசியல்கூட்டணியான கூரியத்மாநாட்டுக் கட்சி பாகிஸ்தான்-இந்தியாவிற்கு இடையில்நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு தாம் போதியளவு ஆதரவுவழங்கத் தயார் என்று அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இப்பேச்சு வார்த்தைகளை முன்னிட்டு வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் பேரணிகள்என்பவற்றை தற்காலிகமாக இடை நிறுத்தப் போவதாக கூரியத் மாநாட்டுக்கட்சி அறிக்கை விடுத்துள்ளது.

காஷ்மீர் தொடர்பாக நடக்கும் உச்சிமாநாட்டை எந்தவிதத்திலும் குழப்பப்படவோ தடுக்கப்படவோ கூடாது என்று தாம் விரும்புவதாகவும் கூரியத் மாநாட்டுக் கட்சி தெரிவித்துள்ளது. [உ-9

# நேர்மையை நிரூபிப்பதற்கு நீதிமன்றுவரத்தயாராக உள்ளேன்!

## மேயர் ஸ்டாலின் ஜெயலலிதாவிற்கு சவால்

[சென்னை]

தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவியேற்ற பின்னர் என்மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடடுள்ளார்.

தற்போதுபொலிஸாரின் வருகையை நான் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று சென்னை மாநகர மேயர் மு. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

எனது நேர்மையையும் குற்றமற்றதன்மையையும்நீதிமன்றத்தில் நிரூபிக்க நான்தயாராக உள்ளேன்.

சென்னை மாநகராட்சியில் ரூபா. 182 கோடிஅளவுக்கு முறை கேடுகள் நடைபெற்றுள்ளதாக குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கட்டட ஒப்பந்தக்காரர் தெய்வசிகாமணி என்பவரும் என் மீது உண்மையற்ற விதத்தில் ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

இப்புகார்களில் எந்தவித உண்மையும் இல்லை என்பதை மக்கள் அறிவார்கள் என ஸ்டாலின் மேலும்தெரிவித்துள்ளார்.

அத்துடன், திமுக மீது ஜெயலலிதா தனிப்பட்ட விரோத உணர்வினால் உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களை அடுக்குவதால் அவர் தொடர்பாக மக்கள் மத்தியில் அதிருப்தி அலை எழத் தொடங்கி இருப்பதாகவும் ஸ்ராலின் தெரிவித்துள்ளார். [உ-9

### உலக தரிசனம்

### செய்திப்பரல்

★ சீனாவின் தென் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் ஐவர் கொல்லப்பட்டு 9 பேர் காணாமற் போயுள்ளனர்.

★ கட்டாரில் வெளியாகும் அல்- வடான் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அஹமத் அலி மூன்று நபர்களினால் கத்தியால் குத்தப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

★ நேபாளத்தில், 10 வது மக்கள் தொகை கணக்கெடுப்பு கடந்த சில தினங்களுக்கு முன் ஆரம்பமாகி உள்ளது.

★ இந்தியாவின் தென் கிழக்கு அஸாமில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் இரு பிள்ளைகள் உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

[உ- 9]

## உலக தரிசன அறிவுப் போட்டி இல -11

முழுப்பெயர்: ------------------------

முகவரி: ------------------------

------------------------

பிறந்த திகதி: ------------------------

போட்டியாளர் கையொப்பம்: ------------------------

பெற்ற புள்ளிகள்: ------------


## மணநீக்கம் தீர்வையெழுதி மணவிலக்குக் அளிக்கும் பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

**சதானந்தன் பெண் ரோசினி**
சைவ வித்தியாசாலை லேன்,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்;
வழக்காளி

எதிராக

வழ இல: மணவிலக்கு/186

**தேவதாசன் சதானந்தன்**
இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்;
எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. இ. த. விக்னராஜா அவர்கள் முன்பாக 2001ம் ஆண்டு சித்திரை மாதம் 26ந் திகதியன்று வழக்காளியும், வழக்காளியின் சட்டத்தரணிகள் திருவாளர்கள் கனகரத்தினம் அசோசியேட்ஸ் (நிறுவனத்தின்) பிரசன்னமாயிருக்க முடிவெய்ய வந்த போது மேற்குறித்த எதிராளிக்கு இவ்வழக்கில் அழைப்புக் கட்டளை பதில் சேவை மூலம் வழங்கப்பட்டு அவர்இவ்வழக்கில் தோன்றி மறுமொழி அணைக்கத்தவறியமையால்.

இவ்வழக்கு எதிர்ப்பில்லா விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு மேற்குறித்தஎதிராளி வழக்காளியை வேண்டுமென்று துறந்தார் என்ற குற்றத்தைப் புரிந்துள்ளார் என மன்று கருதியதால் பின் வருமாறு மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித் தீர்வை தேசிய குடாநாட்டுப் பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து அதனடுத்த (3) மூன்று மாத காலத்துக்குள் மேற்குறித்த எதிராளி இப்பின்னுறுதித் தீர்வையை இம்மன்றின் முழுவிதிப்பாக ஏன் எழுதக்கூடாதென்பதற்குத் தகுந்த காரணங்கள் காட்டினாலன்றி மேற்குறித்த எதிராளி வழக்காளியை வேண்டுமென்று துறந்தார் என்ற காரணத்துக்காக மேற்குறித்த வழக்காளிக்கும் எதிராளிக்கும் 1993ம் ஆண்டு பங்குனி மாதம் 29ந் திகதி நடைபெற்ற விவாகப் பதிவை ரத்துச் செஒது ஒரு மணநீக்கத் தீர்வையை இம்மன்று விதிக்கின்றது என இம்மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித் தீர்வை இம்மன்றின் முழு விதிப்பானவுடன் இவ்வழக்கின் வழக்காளி தனது கன்னிப் பெயரான ஐயா மகள் றோசினி என பெயரை மீளப் பெற்று மணமாகாத பெண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவித்து வரலாமென இம்மன்று கட்டளையிட்டுத் தீர்வையளிக்கின்றது.

2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 26ந் திகதி என்னால் வரையப்பட்டது.

**கனகரத்தினம் அசோசியேட்ஸ்**
வழக்காளியின் சட்டத்தரணி

**ச. வன்னியசிங்கன்**
பதில் பதிவாளர் மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

**திரு. பா. சுப்பிரமணியம்**
பதில் மாவட்ட நீதிபதி மாவட்ட மன்று,
யாழ்ப்பாணம்.

[3234]


## இஸ்ரேலியப் படையினர் தாக்கி பலஸ்தீனப் பெண்கள் மூவர் பலி

### யுத்தம் தீவிரமடையும் அபாய அறிகுறியென அச்சம்

மத்திய கிழக்கில் இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பலஸ்தீனியப் பெண்கள் கொல்லப் பட்டனர்.

இவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் பழி வாங்க வேண்டும் என்று கோஷம் எழுப்பியவாறு ஊர்வலமாகச்சென்றுள்ளார்கள்.

மேற்படி பலியான பெண்கள் மூவரும் காஷாப் பகுதியில் உள்ள தமது வீட்டினில் இருந்த போதே தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

இத்தாக்குதல் இஸ்ரேலிய பயங்கரவாதம் தொடர்கின்றன என்பதனை காட்டியுள்ளது என்று பலஸ்தீன தரப்பில் பேசவல்ல உயர் அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பலஸ்தீனர்கள் தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாலேயே தமது டாங்கிகள் தாக்குதல் நடத்தியது என இஸ்ரேலியப் படையினர் குற்றம்சாட்டியுள்ளனர். (உ-9)

விலங்கொடு மக்கள்
அனையர் இலங்குநூல்
கற்றா ரோடு ஏனை யவர்

குறள்

வலம்புரி

## தமிழ்க் கருவூலத்தின் இலக்கியகருவூலம்

ஈழத்தின் வளர்ச்சியில் வித்துவான் க. சொக்கனின் பங்கு தனித்துவமானது. இலக்கண, இலக்கிய ரீதியில் அவரிடம் பொதிந்துள்ள ஆழ்ந்த அறிவை அறியாத தமிழ் உலகு இருக்கமுடியாது.

தமிழ் மொழியில் அவரிடம் இருந்த ஆழமான அறிவுப் புலத்தின் அறுவடையே இன்றைய தமிழ் ஆசான்கள். இஃது அவரின் தமிழ் அறிவின் உச்சத்திற்கு ஆதாரமாகும்.

அன்று தொடக்கம் இன்றுவரைபேனா முனையிலிருந்துபேச்சரங்குவரை தன் தமிழ்பணியை இடைறாது ஆற்றிவருபவர் அவர். அவரின்இலக்கண, இலக்கிய நூல்கள் தமிழுருக்குக்கிடைத்த பெரும் அணிகலன் என்பதை மறந்துவிட முடியாது.

'சொக்கன்' எழுதிய நூல் எனில் அதில் ஓர் கனதி உண்டு, காத்திரமுண்டு, கருத்தாழமுண்டு என்பதைத்தவிர குறை காண்பதில் அறிஞர் குழாம் முயன்றதில்லை. ஏனெனில் அறிஞர்களின் ஐயத்தைதெளிவுபடுத்தும் அகராதியாக அவரின் நூல்கள் விளங்குகின்றன

அவ்வகையில் இன்று அவரின் 'இலக்கிய கருவூலம்' நூல் வெளிவருவது தமிழுக்கும், தமிழ் மாணவர்க்கும் பெரும் வரப் பிரசாதமாகும்.

சொக்கனின் இலக்கணத் தேர்ச்சியும், முதிர்ச்சியும் கொண்ட இக் கருவூலத்தை யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ் மன்றம் வெளியிட்டுவைப்பது மகிழ்வுக்குரியது. மூதறிஞர் தரும் கருவூலத்தை தமிழ் மன்றம்வெளியிட்டு வைப்பதன் மூலம், அவ் அமைப்பு தனக்கும் பெருமை தேடிக்கொள்கிறது. அத்துடன் மூதறிஞர் சொக்கனால் இன்னமும் வெளியிடப்படாமல் இருக்கும் ஆக்கங்களை நூலுருப்படுத்தி அதன் மூலம்தமிழ் வளர்ச்சிக்கு உதவ தமிழ்மொழி சார்ந்த அமைப்புக்களும், தமிழ் விவகார அமைச்சும் முன் வரவேண்டும்.

அதன் மூலம் வருங்காலச் சந்ததிக்கு அவரின் ஆக்கங்களைக் கற்கும் வாய்ப்பு ஏற்படும். இலக்கண, இலக்கிய அறிவுப் புலம் தற்கால மாணவர்களிடையே மருவிவரும் இக் காலத்தில் தமிழின் கருவூலமாக இருக்கும் வித்துவான் சொக்கனின் இலக்கிய கருவூலங்கள் ஏராளம் வெளிவரதமிழ் நெஞ்சங்கள் உதவ வேண்டும்.

# குப்பிளான் கற்பக விநாயகப் பெருமானுக்கு மக்கள் மனங்களிக்க மகாகும்பாபிஷேகம்

சிவத்தமிழ் வித்தகர்

**சிவ. மகாலிங்கம்**

பிறசமய ஊடுருவலுக்கு இடம் கொடுக்காது இன்றும் தனித் தமிழ்ச் சைவக்கிராமமாக யாழ்ப்பாணத்தில் மிளிரும் ஒரு சில கிராமங்களில் குப்பிளான் பதியும் ஒன்றாகும். சித்தாந்த சிகாமணி மகான் காசிவாசி செந்திநாதையர் பிறந்த ஊராகவும், கலையும் தமிழும் சைவமும் வளர்ந்த மண் ஆகவும் குப்பிளான் கிராமம் திகழ்கிறது. சிறந்த செம்மண் வளமுடைய இக்கிராமத்தில் வாழ்ந்த மக்களில் பலர் விவசாயிகளாகவேஇருந்தார்கள். விவசாயிகளாக இருந்த பொழுதிலும் தமிழ்மொழியிலும் சைவசமயத்திலும் கலைகளிலும் நீங்காத பற்றுக் கொண்டு வாழ்ந்தார்கள். தமிழிசையாம்பண்ணிசையை ஈழமணித் திருநாட்டில் பரப்பிய பெருமைக்குரிய இசைவல்லார் செல்லத்துரை பிறந்ததும் குப்பிளான் கிராமத்திலேயே ஆகும். இக் கிராம மக்களின் உணர்வுகளோடு விநாயக வணக்கம் இரண்டறக் கலந்து காணப்படுகிறது. விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானையே இக் கிராம மக்கள் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகிறார்கள். சித்தாந்த சிகாமணி மகான் காசிவாசிசெந்திநாதையர் பிறந்த குப்பிளான் கிராமம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு திருப்பரங்குன்றம் போல உயர்ந்து நிற்கிறது எனப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்கள்.

### பெருஞ்சாந்தி

குப்பிளான் கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் கற்பக விநாயகப் பெருமானின் சந்நிதானத்திலபெருஞ்சாந்தி என்று அழைக்கப்படுகின்ற மகாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை நடைபெற இருக்கிறது. மகாராஜஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் ஆகியோரின் ஆசியுடன் சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களைத் தலைமைக் குருவாகக் கொண்டு மகாகும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெற இருக்கின்றன.

கலையும், தமிழும் சைவமும் வளர்ந்த மண் கடந்த சில வருடங்களாக காடு மண்டிப் போய் இருந்தது நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலைகளால் செம்மண் வளம் கொண்ட நமது பிரதேசங்கள் யாவும் சிதைவுற்றது. பொன் கொழிக்கும் பூமியாக இருந்த விவசாய நிலங்கள் யாவும் வெறும் தரிசு நிலங்களாக மாறின. கிராமியக் கைத் தொழில்கள் யாவும் சிதைவுபட்டுச் சீரழிந்தது. தன் மானத்தோடு தனது உடலால் பாடுபட்டு உழைத்து வாழ்ந்த மக்களில் பலர் தொழிலின்றி, வாழ வசதியின்றி, இருக்க இடம் இன்றி தெருவெல்லாம் அலைந்தார்கள். உடைமைகளை இழந்தது மட்டுமின்றி அநியாயமாக உயிர்களையும் இழக்கும் பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். நமக்கு ஏன் இந்தச் சோதனையும், வேதனையும், துன்பமும், துயரமும் என்று ஏங்கிப் பரிதவித்தார்கள். சிவபூமியாகிய நமது பூமிக்கு ஏன் இந்தச் சிதைவு ஏற்பட்டது எனச் சிந்தித்தார்கள். தவயோகி திருமூலநாயனார் அருளிய பின்வரும் திருமந்திரத்தின் பொருளை உணர்ந்து கொண்டார்கள்.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளம் குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே

### மஹோற்சவம்

தங்களுடைய வீடு வளவினைத் துப்பரவு செய்வதற்கு முன்பு தங்கள் குல தெய்வத்தினுடைய சந்நிதானத்தைச் சுத்தப்படுத்தினார்கள். ஆலயங்களிலே தீபம் எரிந்தால் தங்களுடைய வாழ்விலே ஒளி வீசும் என நம்பினார்கள். 1990ஆம் ஆண்டு எங்கள் கிராம மக்கள் இடம் பெயர்ந்ததோடு நித்திய பூசைகள் அனைத்தும் தடைப்பட்டு இருந்த எமது குல தெய்வத்தினுடைய சந்நிதானத்தில் 1997 ஆம் ஆண்டு ஆனி மாதம் சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடை பெற்று ஆலயக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டன. மகா கும்பாபிஷேகம் நடை பெற்று மஹோற்சவ விழா நடைபெறும் நாள் எப்பொழுதும் வரும் எனப் பக்தர்கள் அனைவரும் எதிர் பார்த்து இருந்தார்கள் வேண்டுவார் வேண்டுவனவற்றையெல்லாம் வாரி வழங்கும் கற்பக விநாயகப் பெருமானின் திருவருளினால் பக்தர்கள் அனைவருடைய ஒருமித்த வேண்டுகோளும் செயல் வடிவம் பெற்றுவிட்டது மகாகும்பாபிஷேகமும் தொடர்ந்து மகோற்சவப் பெரு விழாவும் இந்த வருடம் நடை பெற இருக்கிறது.

# அருட் கொடையால் அற்புதங்கள் பல புரிந்த அந்தோனியாரை நாடி ஆசிகள் பெறுவோம்

**ஆ.ஜென்சன் றொனால்ட்**

(ஈச்சமோட்டை)

ஆனி பதின் மூன்றாம் நாளை நினைக்கையிலே மக்கள் மனங்களெங்கும் புனித அந்தோனியாரின் அருட்திரு உருவம் கண்முன்னே வந்து நிற்கும்.

இறைமகன் இயேசுக் கிறிஸ்துவின் அருள்தரும் அற்புத வார்த்தைகளை தன் வாழ்வதனில் கைக்கொண்டு தலைசிறந்த மறைபோதகராய் திகழ்ந்து மனிதரில் புனிதரான அந்தோனியாரின் வாழ்வு எமக்கெல்லாம் நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

### அந்தோனியாரின் பிறப்பு

போத்துக்கல் நாட்டிலுள்ள 'லிஸ்பன்' நகரில் 1195 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பதினைந்தாம் திகதி இப் புவிதனிலே புண்ணிய புஷ்பமான புனித அந்தோனியார் அவதரித்தார்.

அவர் மண்ணகத்தில் பிறந்த நாள் மிகவும் விஷேட தினம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது பரிசுத்த கன்னிமரியாள் விண்ணேற்பு அடைந்த ஆவணி பதினைந்தாம் திகதியிலேயே புனித அந்தோனியாருடைய பிறப்பும் நிகழ்ந்தது.

இவ்வாறு பிறக்கும் போதே அருட்கொடை பெற்ற அந்தோனியாருக்கு தாய்தந்தையரிட்ட இயற் பெயர் 'பெர்டினன்ட்' ஆகும்

### மறை போதகப் பணி

புனித அந்தோனியார் இறைவனின் உயிருள்ள வார்த்தைக்கு ஏற்றவிதத்தில் முன்மாதிரிகையாக வாழ்ந்ததோடு இறைவார்த்தையை மக்களிடையே விதைத்து மக்களுக்கும் இறைவனுக்குமிடையே நல் உறவைப்பேணுவதற்கு வழிசமைத்தார்.

எளிமையான கோலமும், தன்னலமற்ற போக்கும், தியாக வாழ்வுமே புனித அந்தோனியாரின் அணிகலங்கள், மறை போதகப் பணியிலும் தனிமையில் செபிப்பதிலும் தனது நேரத்தை அர்ப்பணித்து சிறந்ததோர் இறைபணியாளராகத் திகழ்ந்தார்.

புனித அந்தோனியார் மக்களுக்கு மட்டுமல்ல, ஏனைய ஜீவராசிகளுக்கும் தனது இறைபோதனையை அளித்தார் என்றும், கடல் மீன்கள் கூட அவரது போதனையைக் கேட்பதற்காய் கடல் மேல் கூட்டம் கூட்டமாய் பிரசன்னமாயிருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

அந்தளவிற்கு உலகத்து உயிர்கள் அனைத்தும் இறை வார்த்தை எனும் அற்புத கொடையைப் பெற்று இன்புற்று வாழ வேண்டும் என்பதில் புனித அந்தோனியார் ஆழமான பற்று வைத்திருந்தார்.

### இறைவனடி சேர்ந்தார்

ஆயிரத்து இருநூற்று முப்பத்தோராம் ஆண்டு ஆனிமாதம் பதின் மூன்றம் திகதி பதுவையிலுள்ள 'ஆர் செல்லா' எனும் நகரில் தனது முப்பத்தாறாவது வயதில் இறைவனடி சேர்ந்தார். இத்தினமே புனித அந்தோனியாரின் பெருவிழாவாக உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படுகின்றது.

புனித அந்தோனியார் இறைவனடி சேர்ந்து நான்காம் நாள் நல்லடக்கம் செய்யப்பட்டார். அவ்வாறு நல்லடக்கம் செய்யப்பட்ட தினம் ஒரு செவ்வாய்க் கிழமையாகும். அதை நினைவுபடுத்தும் முகமாகவே பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் புனித அந்தோனியார் ஆலயங்களில் சிறப்பு திருப்பலிகளும் வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றன.

### அழியாத திருநாவு

புனித அந்தோனியார் இறைவனடி சேர்ந்து இற்றைக்கு எழுநூற்று எழுபது ஆண்டுகளாகியும், இன்று வரை அவரது 'திரு நாவு' அழியாது பாதுவாநகரின் 'பசிலிக்கா' பேராலயத்தில் ஒரு பேழையினுள் புனிதமாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த அழியாத திருநாவே புனித அந்தோனியாரின் இறைவார்த்தை அறிவிப்பின் உன்னதத்தை எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

தனது நாவினால் இறைவனின் உயிருள்ளவார்த்தையைப் பகிர்ந்தளித்து, வாழ்வின் எல்லைவரை இறைவனின் வார்த்தைக்காகவே வாழ்ந்த புனித அந்தோனியாரது திருநாவு எமக்கு கிடைத்த அற்புத பொக்கிஷமே.

### திரு நிலைப்படுத்தப்பட்டார்

ஆயிரத்து இரு நூற்று முப்பத்து இரண்டாம் ஆண்டு வைகாசிமாதம் முப்பதாம் திகதி திருத்தந்தை ஒன்பதாம் கிறகோரியினால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

மிகவும் குறுகியகாலத்திலேயே புனிதர் நிலையைப் பெறும் தகுதி புனித அந்தோனியாருக்குகிடைத்திருந்தது அவரது இறைபணிக்கும் நல் வாழ்வுக்கும் கிடைத்த பரிசு என்றே கூற வேண்டும்.

### கோடி அற்புதங்கள்

தம்மை நாடிவரும் பக்தர் கோடிகட்கு புனித அந்தோனியார் தனது மன்றாட்டினால் இறைவனிடம் இரந்து அற்புத வரங்களை அள்ளிப் பொழிகின்றார்.

செவிடர் கேட்கவும், ஊமைகள் பேசவும், முடவர் நடக்கவும், மாறாத வியாதிகள் குணம் பெறவும், காணாமற் போனோர் கிடைக்கவும் என புனித அந்தோனியார், தம்மை நாடிவரும் பக்தர்களுக்கு அற்புதங்களை நாளும், நாளும் செய்து கொண்டேயிருக்கின்றார்.

மத வேறுபாடின்றித் தம்மை நாடிவரும் எந்த பக்தருக்கும் நல் வரங்களை அள்ளி அள்ளி புனித அந்தோனியார் பொழிவதால் அவரது திருத்தலங்களைத் தேடி கோடானு கோடிபக்தர்கள் நாடிவந்து நல்வரங்கள் பல பெறுகின்றனர்.

இலங்கையிலே புனித அந்தோனியாரின் தேவாலயங்கள் நூற்று எழுபத்து இரண்டு உள்ளன; இவற்றில் கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம், யாழ்ப்பாணம், பாஷையூர் அந்தோனியார் தேவாலயங்களை பிரசித்தமானவை எனக் குறிப்பிடலாம்.

### எமக்குரிய அழைத்தல்

புனித அந்தோனியாரின் பக்தர்களாகிய எமக்கு அவர் தரும் அழைப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும்

[2 ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். மாநகரசபைத் தொழிலாளர்கள்
# வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு முஸ்தீபு!
## இம்மாதம் 15-ம் திகதி வரை காலக்கெடு

(யாழ்ப்பாணம்)
யாழ் மாநகரசபையில் கடமையாற்றும் சுத்திகரிபு தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

நேற்றையதினம் நாவலர் மண்டபத்தில் நடந்த ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் கூட்டத்திலேயே இவ்வேலை நிறுத்தப் போராட்டம்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

★ தற்காலிக ஊழியரை நிரந்தரமாக்குதல் 86 186 இலக்க சுற்றுநிருபத்தின்படி உள்ளகப்பதவியுயர்வு வழங்குதல்.

★ ஓய்வுதியக் கொடுப்பனவுகளை உரியகாலத்தில் வழங்குதல்.

★ யாழ்மாநகர எல்லைக்குள் வதியும் தொழிலாளர்களுக்கு வீடுகள் அமைத்துத் தருதல் உட்பட பலகோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் எதிர்வரும் 15ந்திகதிமுதல்வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

நேற்றுநடந்த இக்கூட்டத்தில் மாநகரசபையின் உறுப்பினர்கள் மங்களநேசன், தவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் போராட்டத்திற்கு தமது ஆதரவையும் தெரிவித்துள்ளனர்- [ந-10]

---

### சமாதான...

மர் ஆகியோருடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகளில் சமாதான முயற்சிகள் உள்ளதாகவும் இதனால் புதிய மாற்றத்தின் அடிப்படையில் சமாதான முயச்சிகளை எவ்வாறு தொடர்வதென முடிவு செய்ய வேண்டியநிலையில் தான் இருப்பதாகவும் ஜக்லண்ட் இப்பேட்டியின் போது புதிய தொருவிடயத்தை வெளிப்படுத்தியுள்ளார். (இ)

---

# துன்னாலையில் கோஷ்டி மோதல் 9பேருக்கு வாள் வெட்டு!

(மந்திகை)
துன்னாலைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற கோஷ்டிமோதலில் வாள் வெட்டுக்கு இலக்கான நிலையில் பெண்ணொருவர் உட்பட 9பேர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணிக்கம் சிவபாதம் [வயது-52] செல்லன் விநோதன் [வயது-33] தங்கவேல் மதன் [வயது-19] ஆகிய மூவரும் யாழ் போதனாவைத்திய சாலையிலும், தம்பிராசா சித்திரா [வயது-38] மணியம் சந்திரகுமார் [வயது-20] குணசேகரம் குணதீபன் [வயது 20] பொன்னன் கந்தசாமி [வயது-47] கந்தையா செல்லன் [வயது-54] கிருஷ்னன் ஜெபசீலன் [வயது-31] ஆகிய ஆறுபேரும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ-5-23]

---

### யாழ். வைத்திய...

முன்வைக்கப்பட்ட கோரிக்கை நியாயமானதெனவும், சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளக்கூடியது எனவும் குறிப்பிட்டதுடன்

இவ்விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை தம்மிடம் சமர்ப்பிக்கும்படியும்,

ஜனாதிபதியுடன்தொடர்பு கொண்டு கூடியவிரைவில் ஒரு சுமுகமான தீர்வினைப் பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை திட்டமிட்டபடி இன்று மூன்றவது நாளாகவும் வைத்தியர்களின் போராட்டம் தொடரும் என தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10

---

## காரைநகரில் மஹாயாகம்

(காரைநகர்)
காரைநகர் கிழவன்காடு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானத்தில் குருபகவான் பெயர்ச்சி மஹாயாகம் இன்று புதன்கிழமை காலை 7-00 மணிக்கு நடைபெறும். இவ்யாகத்தை சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார். (ந)

---

### சிவில்

இணைப்புக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது இச்சந்திப்பில் வவுனியா மாவட்டஅரச அதிபர் கே. கணேசலிங்கம் கலந்துகொள்வார். [வ]

---

### புலிகள்

களுடன்பேசவேண்டியநிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் கட்சிகளும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சில துரதிஸ்ர வசமான நிகழ்வுகளுக்காக விடுதலைப்புலிகளை பலவீனப் படுத்த வேண்டுமென்று எவராவது நினைப்பார்களானால் அது தமிழ்மக்களின் எதிர் பார்ப்புக்களுக்கு விரோதமாகவே அமையும்.

தமிழ் மக்களின் பிரதி நிதிகளாக விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில்கலந்துகொள்வதையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

தடைசெய்யப்பட்ட நிலையில் விடுதலைப்புலிகள் பேச்சில் பங்குபற்றுவதைதமிழ்மக்கள் விரும்பவில்லை,

ஏனெனில் விடுதலைப் புலிகள் அரசுடன் பேசப்போவது தமிழ்மக்களின்பிரச்சினையை

இதனால் விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்க வேண்டுமென்றும் செல்வம் அடைக்கலநாதன் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். [இ]

---

### 14 நாட்களுக்குள்

முன்நிலையில் ஆஜர்படுத்துவதில்லை என்றும் இது தொடர்பாக சட்டமா அதிபர் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர்கள் நீதிமன்றில் பார்வைக்கு வைக்க வேண்டுமென்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகாலச்சட்டம்ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மாதக் கணக்காகவும் வருடக்கணக்காகவும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது [ம]

---

### முஸ்லிம்

காங்கிரஸ் வட்டாரங்கள் கவலைவெளியிட்டுள்ளன.

முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை பொது ஜன ஐக்கிய முன்னணி அரசினால் மட்டுமே நிலைநிறுத்த முடியும் என்றும் ஐக்கிய. ஐக்கியதேசியக் கட்சியினால் அது ஒரு போதும் முடியாது என்றும் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் தலைமையிலான குழுவினர் நம்பிக்கைவெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அரசில் இருந்து விலகுவதா? இல்லையா என்ற முடிவை எடுக்கும் அதிகாரத்தை அமைச்சர் ரவூப்ஹக்கீம்மிடம் முஸ்லிம் காங்கிரஸ் உயர் மட்டக்குழு விட்டுள்ளதை அடுத்து முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்களின் முழு ஆதரவை திரட்டுவதில் அமைச்சர் ஹக்கீம் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் நிலவும் விரிசல் நிலையானது அரசு மீது ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு வலுவூட்டுவதாக அமையுமென அரசியல் அவதானிகள் ஆருடம் தெரிவித்துள்ளனர். [வ]

---

### ஆயர்களின்

குக்கொண்டுவர கத்தோலிக்கத் தலைவர்களும், பொதுமக்களும் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐரோப்பாவுக்கு விஜயம் மேற்கொண் இலங்கை ஆயர்கள், அங்கு இனப்பிரச்சினைதொடர்பாக வெளியிட்டகருத்துக்கள் மற்றும் வெளியிட்ட அறிக்கைகள் இலங்கை கத்தோலிக்க ஆயர் கவுன்சிலின் உத்தியோகபூர்வஅறிக்கை அல்லஎனஆயர் கவுன்சில் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க ஆசிய ஆயர்கள் அமைப்பு மேற்படி இலங்கை ஆயர்களின் கருத்துக்கள் தொடர்பாக நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அமைப்பின் தலைவர் வண. ஒக்ஸ்போட் லோபஸ் வெளியிட்ட அவ்வறிக்கையில்; இலங்கை ஆயர்கள் மல்கம் ரஞ்சித், இராயப்பு யோசப் ஆகியோர் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக வெளியிட்டகருத்துக்கள், மற்றும் அறிக்கைக்கும் ஆயர் கவுன்சிலுக்கும் தொடர்பில்லையென்றும்அதுதொடர்பாக அவ்விருவரிடமும் விளக்கம்கோர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---


## வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு-யாழ் அலுவலகம்

## பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்வடக்கு கிழக்கின் தமிழ்விவகாரங்கள் அமைச்சு அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களில் பகல் இரவு நேரங்களில் காவற்கடமை புரிவதற்கு தகுதி வாய்ந்த ஆண், பெண் இருபாலாரிடமிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்களை கோருகின்றது.

**குறைந்த பட்ச கல்வித்தகமை:** க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உயரம்:** 5 அடி 6 அங்குலம்

**வயதெல்லை:** 18 - 40

விளையாட்டுத்துறையில் திறமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிபரங்களைக் கொண்ட விண்ணப்பங்களை மனிதவள அபிவிருத்திப் பிரிவு, வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சு – யாழ் அலுவலகம் 250/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும். தபாலின் இடது பக்க மேல் மூலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு எனக்குறிப்பிடவும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:** பிற்போடப்பட்டுள்ளது

மனித வள அபிவிருத்திப் பிரிவு,
வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு,
யாழ் அலுவலகம்
250/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (கி-2102)



## நாகம்ஸ்
(சுன்னாகம்)
அர்ஜுன், அபிதா
பிரகாஷ்ராஜ்
நடித்த
## வானவில்
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30 [பு. நே]
(கி-2051)



எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில்.....



# நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [கி-2003]

நகுலா நகைமாடம்
241பு, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை 'வலம்புரி' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 13 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.